# அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

# American Tamil Academy

## நிலை-6 கையேடு

**பள்ளி ஆண்டு : *2013-14***

www.americantamilacademy.org
www.amtaac.org

# பாடத்திட்டம்

**வயது வரம்பு:** குறைந்த பட்சம் 9 வயது.

**தகுதி:**

» அ த க நிலை 5 முடித்திருக்க வேண்டும் அல்லது ஏற்கனவே வாக்கியங்களைப் படித்து புரிந்து கொள்ளுதல்; சுயமாக எளிய வாக்கியங்களை எழுதுதல், இலக்கண அறிவு (ஒருமை, பன்மை, வினைச்சொல், பெயர்ச்சொல், சுட்டுப்பெயர், கால நிலைகள், வினை வகைகள், மற்றும் எட்டு வகையான வேற்றுமை உருபுகள் அறிதல்) போன்ற திறன்களுடன், அடிப்படைத் தமிழ் உரையாடல் திறனும் பெற்றிருத்தல் அவசியம்.

**நோக்கம்:**

**மொழித்திறன்:**

» வாக்கியங்களைத் தெளிந்த உச்சரிப்போடு பிழையின்றி படித்தல், புரிந்து கொள்ளுதல், எழுதுதல்.

» மொழி மாற்றம் செய்தல்; பண்பாடு மற்றும் இலக்கியம் சார்ந்த பாடங்களைப் படித்து தெளிவுபட கருத்துக்களை வெளிப்படுத்தல்.

» வாக்கியங்கள், கருத்துக்கள், வார்த்தைகள் மற்றும் இலக்கணத்தை ஆங்கில மொழியோடு ஒப்பிட்டுப் பயிலுதல்.

» பேச்சுத் தமிழில் அமைந்திருக்கும் உரையாடல் பாடங்களைப் பயின்று பொருளறிதல்.

» எளிமையான கட்டுரை, கடிதம் எழுதுதல்.

» கதையைப் படித்து புரிந்துக் கொண்டு விடுபட்ட பகுதியை நிறைவு செய்தல்.

**இலக்கணம்:**

» பின் வரும் இலக்கணத்தைப் பாட மற்றும் பயிற்சி நூல்களின் வாயிலாக பயிலுதல்.

♦ வினைப்பாகுபாடுகள் (verb classes)

♦ வேற்றுமையுருபுகள் (declension)

♦ வினைத்தொகை / பண்புத்தொகை (implied verbs / nouns)

♦ உவமை ./ உருவகம் (simile / metaphor)

♦ சொல்லுருபு (post position)

♦ தொடர்வினைகள்(continuous progressive tense)

♦ துணைவினைகள் (auxiliary verbs)

♦ நேர்க்கூற்று, நேரல்கூற்று (direct indirect speech)

♦ பகுபதம், பகாப்பதம்(derivative / primitivewords)

♦ மரபுத்தொடர் / வழக்குத்தொடர் (slangs / idioms)

♦ இயல்பு/விகாரப் புணர்ச்சி (combination / compounding)

**உரையாடல்**:

மாணவர்களுக்கு அளிக்கப்படும் ஒலிக்கோப்பினைக் கேட்டு அதில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு மாணவர்கள் ஒலி வடிவில் தங்கள் விடையை பதிவு செய்து ஒலிக்கோப்பாக அனுப்பி வைத்தல்.

பொருளடக்கம்

பாடம் - 1 தன்னம்பிக்கை
இலக்கணச் சொல் வகைகள் - மீள்பார்வை
தோழர் இருவர் பேசிக்கொள்கிறார்கள்

பாடம் - 2 தன் வினை
வேற்றுமை வகைகள் - மீள்பார்வை
தமிழ்ப்பள்ளி வரவேற்பாளருக்கும், பார்வையாளருக்கும் நடக்கும் உரையாடல்

பாடம் - 3 விடாமுயற்சி
ஆகுபெயர் - Metonymy
இரண்டு நண்பர்கள் பேசிக்கொள்கிறார்கள்

பாடம் - 4 ஆறாத வடுக்கள்
நேர்க்கூற்று / நேரல் கூற்று(அயற்கூற்று) - Direct and Indirect speech
நேர்க்கூற்று / நேரல் கூற்று

பாடம் - 5 மாயன் நாகரீகம்
வினைத்தொகை / பண்புத்தொகை - Implied Verbs / Nouns
வினைத்தொகை - அப்பாவும் அம்மாவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்

பாடம் - 6 செஞ்சிலுவைச் சங்கம்
உவமைத்தொகை - Simile Classification of verbs
பண்புத்தொகை - ஆசிரியரும் மாணவர்களும் உரையாடும் காட்சி

பாடம் - 7 ஆலோவீன் கொண்டாட்டங்கள் (HALLOWEEN CELEBRATIONS)
இடைச்சொல் - clitic
உவமைத்தொகை - பாட்டியும் பேரனும் உரையாடுகிறார்கள்

பாடம் - 8 நீங்கள் எப்படி?
இடைச்சொல் - clitic
உம்மைத்தொகை

பாடம் - 9 புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
பகுபதம் / பகாப்பதம் - Derivative words / Primitive words
இடைச்சொல் - தாத்தாவும் பேத்தியும் தொலைபேசியில் பேசுகிறார்கள்

பாடம் - 10 மரமா? மனிதனா?
புணர்ச்சி விதிகள் - Combination / Compounding
அம்மாவும் மகளும் கடைக்குப் போகிறார்கள்

பாடம் - 11 தெனாலிராமன் வளர்த்த குதிரை
புணர்ச்சி விதிகள் - தோன்றல் - Combination / Compounding
விமான நிலையத்தில் அப்பா, அம்மா, பெண் பேசிக்கொள்கிறார்கள்

பாடம் - 12 பெருந்தலைவர் காமராசர்
புணர்ச்சி விதிகள் - தோன்றல் - Combination / Compounding
இரண்டு நண்பர்கள் உழவர்சந்தையில் சந்தித்துப் பேசிக்கொள்கிறார்கள்

| | |
|---|---|
| பாடம் - 13 | குற்றால அருவி / திருக்குற்றால நீர்வீழ்ச்சி<br>புணர்ச்சி விதிகள் - திரிதல் - Combination / Compounding<br>இரண்டு நண்பர்கள் செல்பேசியில் பேசுகிறார்கள் |
| பாடம் - 14 | பாசம் மிகுந்த கிளி<br>வழக்குச் சொல் மற்றும் மரபுத்தொடர் Slang / Idioms and Phrases<br>அமைப்பாளரும், போட்டியாளரும் பேசுகிறார்கள் |
| பாடம் - 15 | நாட்டியப் பறவை<br>அடுக்குத் தொடர் / இரட்டைக் கிளவி - Imitative words<br>இரட்டைக்கிளவி / அடுக்குத் தொடர் அம்மாவும் தோழியும் பேசுகிறார்கள் |
| பாடம் - 16 | புத்தகம் பேசுகிறேன்<br>இயற்சொல் - திரிசொல் Poetic / Standard words<br>ஒரு கவிஞரை மாணவர்கள் சந்தித்துப் பேசுகிறார்கள் |
| பாடம் - 17 | தாமரை<br>சொல்லுருபு - Postpositions<br>சொல்லுருபு - ஒருவர் கடையில் இருக்கும் நபரிடம் முகவரி கேட்கிறார் |
| பாடம் - 18 | இயற்கை மருத்துவம்<br>கிரந்த எழுத்துகள் - Grantha Letters<br>ஷர்மிளாவும், ஸ்ரீநிவாஸும் பேசிக் கொள்கிறார்கள் |
| பாடம் - 19 | கல்பனா சாவ்லா<br>துணைவினைகள் - Auxiliary Verbs<br>இரண்டு தோழிகள் பேசிக்கொள்கிறார்கள் |
| பாடம் - 20 | ஆமிஷ் இன மக்கள்<br>துணைவினையும் வினைமுற்றும்<br>அம்மாவும் பிள்ளையும் பேசிக்கொள்கிறார்கள் |
| பாடம் - 21 | மயிலின் அறிவு<br>துணைவினைகள் - Auxiliary Verbs<br>அண்ணனும் தம்பியும் பேசிக்கொள்கிறார்கள் |
| பாடம் - 22 | அன்னை தெரேசா<br>துணைவினைகள் - Auxiliary Verbs<br>இரண்டு தோழிகள் பேசுகிறார்கள் |
| பாடம் - 23 | தமிழர் உணவுமுறைகள்<br>தொடர்வினைகள் - Continuous / Progressive Tense<br>ராமனும், மகேஸ்வரியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள் |
| பாடம் - 24 | ராபர்ட் கால்டுவெல்<br>எச்சங்கள் - மீள்பார்வை Participles<br>தமிழாசிரியரும் மாணவர்களும் உரையாடுகிறார்கள் |
| பாடம் - 25 | ரஷ்மோர் மலைத்தொடர்<br>வாக்கிய வகைகள் - Sentences மீள்பார்வை<br>முன்பின் அறிமுகம் இல்லாத இருவர் பேசுகிறார்கள் |

# மாணவர்கள் பின்பற்ற வேண்டியவை

## பாடத்திட்ட / மதிப்பீட்டு முறை விளக்கம்

மொத்தம் 25 பாடங்கள் மற்றும் அதற்கான பயிற்சிகள்.
2 மணி நேர வகுப்புகள் கற்பிக்க பரிந்துரைக்கப்படுகிறது. – 25 * 2 = 50 மணி நேரங்கள்

ஒவ்வொரு பாடத்துக்குமான வீட்டு பாடங்கள், வார நாட்களுக்கு ஒன்றென ஐந்து பக்கங்கள் கொண்டவை.
மாணவர்கள் தினசரி குறைந்த பட்சம் 30 நிமிடங்களாவது தமிழ்ப் பாடங்களைப் படிப்பது அவசியம். - 25 * 2.50 = 62.50 மணி நேரங்கள்

உரையாடல் பயிற்சிக்கென மாணவர்களுக்கு பயிற்சிகள் ஒலி வடிவில் வழங்கப்படும். மாணவர்கள் ஒலித்துண்டைக் கேட்டுப் புரிந்துக் கொண்டு தொடரும் கேள்விகளுக்கு தங்களது குரலில் பதிலைப் பதிவு செய்து அனுப்பி வைக்க வெண்டும். . - 25 * .50 = 12.50 மணி நேரங்கள்

மூன்று பருவங்களாகத் தேர்வு நடத்தப்படும். வகுப்பறைக்கு வருவது, உரையாடல் பயிற்சி உட்பட வீட்டுப்பாடங்கள் நிறைவுடன் செய்வது மற்றும் மூன்று பருவத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் ஆகிய அனைத்தையும் கொண்டு, ஆண்டு இறுதியில் மாணாக்கரின் தமிழறிவு அறியப்படும்.

## வகுப்பில் பின்பற்ற வேண்டியவை:

2 மணி நேர கால அட்டவணை (தமிழ் உரையாடல் அவசியம்).

தமிழ்த்தாய் வாழ்த்து – 5 நிமிடம்
தமிழில் உரையாடல் / கடந்த வார வீட்டுப் பாடம் - 10 நிமிடங்கள்
புதிய பாடம் (படித்தல், அருஞ்சொற்பொருள், கலந்துரையாடல்) - 30 நிமிடங்கள்
இலக்கணம் (படித்தல், கலந்துரையாடல்) - 45 நிமிடங்கள்
உரையாடல் பயிற்சி - 30 நிமிடங்கள்

## வீட்டில் பின்பற்ற வேண்டியவை:

தினமும் 30 நிமிடங்கள் தமிழ் பாடங்களைப் படிக்க வேண்டும்.
கடந்த வாரம் பள்ளியில் படித்த பாடங்களைப் பற்றி தமிழில் உரையாடவும்.
வீட்டுப் பாடம்: ஆசிரியரால் கொடுக்கப்பட்ட பயிற்சி நூல் பக்கங்களில் ஓவ்வொரு நாளும் குறைந்தபட்சம் ஒரு பக்கம்.
புதிதான சொற்களுக்கு கணினியில் பொருளைத் தேடி அறிந்துக் கொள்ளுதல்.
படித்த புத்தகங்கள், பார்த்த திரைப்படங்கள் குறித்து தமிழில் தங்களது கருத்துகளை பேசி / எழுதிப் பழகுதல்.

# பன்முகத் திறனாய்வு

மூன்று பருவத் தேர்வுகளைத் தவிர, ஒவ்வொரு பருவமும் மாணவரின் பன்முகத் தமிழ்த் திறனை அறிய திறனாய்வுகளும் நடத்தப்படும். இத் திறனாய்வுகள் வாசித்தல், எழுதுதல், பேசுதல், கேட்டல் ஆகியத் திறன்களை அறியும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மாதிரிக்கு கீழே சில திறனாய்வுக் கெள்விகள் தரப்பட்டுள்ளன. இக்கேள்விகள் பாடப் புத்தகத்திலிருந்து  இல்லாமல் வேறு புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

## வாசிப்பு திறன் :

கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியை வாசித்து காட்டவும் :

சுப்பிரமணிய பாரதி  (சின்னசுவாமி சுப்பிரமணிய பாரதி) . இவர் பாரதியார் என்றும்,  மகாகவி என்றும்  அழைக்கப் படுகிறார்.  பாரதி ஒரு கவிஞர், எழுத்தாளர்,  பத்திரிக்கையாசிரியர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி என பல்வேறு பரிமாணங்கள் கொண்டவர். சுப்பிரமணியன் என்ற இயற்பெயர் கொண்டவர்.

தமிழ்,  தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு மற்றும் பல்வேறு  சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.  இவருடைய கவித்திறனை மெச்சி பாரதி என்ற பட்டம் எட்டப்ப  நாயக்கர் மன்னரால் எட்டயபுரம் அரசசபையால் வழங்கப்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப் போராகவும், பாஞ்சாலியை பாரத தேவியாகவும் உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்புதான் பாஞ்சாலி சபதம். அழகிய இலக்கிய நயத்தையும், மிக அழகான கவிநயத்தையும் கொண்ட தமிழின் அழியாக் காவியமாக பாரதியின் பாஞ்சாலி சபதம் விளங்குகிறது.
விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி தேசிய கவியாக போற்றப்படுகிறார். மண்ணும் இமயமலை எங்கள் மலையே... மாநிலமீதிதுபோல் பிறிதிலையே... இன்னறு நீர்க்கங்கை ஆறெங்கள் ஆறே... இங்கிதன் மாண்பிற்கெதிர் எது வேறே என்று எழுதியவர்.

## எழுத்துத் திறன் :

கீழே உள்ள சொற்றொடர்களை ஆசிரியர் வாசிக்க மாணவர்  எழுதி காட்ட வேண்டும் :

1. மயிலுக்கு கூர்மையான கண் பார்வை உண்டு .
2. அம்மா வற்றல் பொறித்தார் .
3. முதன்மை திசைகள் நான்காகும் . கிழக்கு , மேற்கு , தெற்கு , வடக்கு .
4. திருக்குற்றால மலையில்  " சித்ரா நதி "  எனும் ஆறு தோன்றுகிறது .
5. படித்தவரும் பாமரரும் புரிந்துக் கொள்ளக் கூடியச் சொல் இயற்சொல்

## பேச்சுத் திறன் :

இந்த வார பயிற்சியை கேட்டு, கொடுக்கபட்ட வினாக்களுக்கு விடை கொடுக்கவும்:

1. சொர்க்கத்தில் என்ன நடந்தது?
2. நரகத்தில் என்ன நடந்தது ? நீதி என்ன?

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."  *இந்த குறளுக்கு பொருள் கூறவும் ?*

**கேட்கும் திறன் :** மாபெரும் தலைவர்கள் என்பதின் தொடர்ச்சியாக இம்முறை பெருந்தலைவர் காமராஜரைப் பற்றிய ஒரு சிறிய கோப்பு ஒலி வடிவில் தரப்பட்டுள்ளது கோப்பைக் கேட்டுவிட்டு பின்வரும் கேள்விகளுக்கு .விடையளிக்கவும்

1. முதலமைச்சராக இருந்த போது காமராஜர், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு என்ன செய்தார்?
2. பள்ளிச் சீரமைப்பைத் தவிர வேறு என்னென்ன செய்தார் காமராஜர்?
3. திட்டங்கள் சரிவர நடைபெறுகிறதா என்பதை அவர் எப்படி அறிந்து வந்தார்?

# பருவத் தேர்வு வினாத்தாள் மாதிரி

பின்வரும் வாக்கியங்களில் அடிக்கோடிட்ட சொற்களின் வித்தியாசங்களை ஆங்கிலத்தில் விளக்கவும்

(3 x 1 = 3 marks)

ஆசிரியர் மாணவருக்கு கொடுத்தார். ________________________________________

ஆசிரியர் மாணவரிடம் கொடுத்தார். ________________________________________

மரத்தில் செய்தது. ________________________________________

மரத்தால் செய்தது. ________________________________________

ஆசிரியருடைய கடிதம் கொடுத்தேன். ________________________________________

ஆசிரியரிடம் கடிதம் கொடுத்தேன். ________________________________________

SAMPLE

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் (4 x .5 = 2 marks)

| வாக்கியம். | சினைப் பெயர் | பண்புப் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | தொழிற் பெயர் | பொருட் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| கால் | ○ | ○ | ○ | ○ | ○ | ○ |
| நியூயார்க் | ○ | ○ | ○ | ○ | ○ | ○ |
| வரைதல் | ○ | ○ | ○ | ○ | ○ | ○ |
| மார்கழி | ○ | ○ | ○ | ○ | ○ | ○ |

கீழ்க்காணும் வாக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் போது மேசை எனும் சொல் எந்த வகை வேற்றுமைகளை அடையும். (5 x .5 = 2.5 marks)

| வாக்கியம். | மேசையில் | மேசைக்கு | மேசையின் | மேசையால் | மேசையை |
|---|---|---|---|---|---|
| The fruit was on the table. | ⬭ | ⬭ | ⬭ | ⬭ | ⬭ |
| The fruit was under the table | ⬭ | ⬭ | ⬭ | ⬭ | ⬭ |
| There is no use with the table. | ⬭ | ⬭ | ⬭ | ⬭ | ⬭ |
| The boy pushed the table. | ⬭ | ⬭ | ⬭ | ⬭ | ⬭ |
| A chair was tied to the table | ⬭ | ⬭ | ⬭ | ⬭ | ⬭ |

# பருவத் தேர்வு வினாத்தாள் மாதிரி

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்பவும். (5 x .5 = 2.5 marks)

தலைக்கு ஒரு தேங்காய் கொடு என்பதில் தலை என்பது ............... ஆகும்.

வாழை இனிப்பானது என்பதில் வாழை என்பது ......................... ஆகும்.

காஞ்சிபுரம் அழுதது என்பதில் காஞ்சிபுரம் என்பது ......................... ஆகும்.

மாலை ஆனது என்பதில் மாலை என்பது ......................... ஆகும்.

வீட்டுக்கு வெள்ளை அடித்தார்கள் என்பதில் வெள்ளை என்பது ......................... ஆகும்.

1. பொருளாகு பெயர் 2 பண்பாகு பெயர் 3. இடவாகு பெயர் 4. காலவாகு பெயர் 5. சினையாகு பெயர்

பின்வரும் சொற்களை பிரித்து / பகுத்து எழுதவும் (5 x 1 = 5 marks)

| சொற்கள் | | |
|---|---|---|
| கருங்குரங்கு | | + |
| பெருந்துயர் | | + |
| வெண்ணிலா | | + |
| இளமங்கை | | + |
| செங்கதிர் | | + |

SAMPLE

பின்வரும் ஆங்கில வாக்கியங்களுக்கு எது மிகச் சரியான மொழியாக்கம் என்பதை தெரிவு செய்யவும் (5x1 =5 marks)

He ran like a Cheetah.

○ அவன் சிறுத்தையென ஓடினான்
○ அவன் சிறுத்தையை விரும்பி ஓடினான்.
○ அவன் சிறுத்தையாக ஓடினான்.
○ அவன் சிறுத்தைப் போல ஓடினான்.

Her heart is like gold.

○ அவளது இதயம் தங்கத்தைப் போன்றது.
○ அவளுக்கு தங்கமான இதயம்.
○ அவள் இதயம் தங்கம்.
○ அனைத்தும் சரி.

He is as brave as a Lion

○ அவன் சிங்கம் போன்றவன்.
○ அவன் சிங்கத்தைப் போல தைரியமானவன்.
○ அவனது தைரியம் சிங்கத்தைப்போன்றது.
○ அனைத்தும் சரி.

I met him yesterday

○ அவரை நான் நேற்று பார்த்தேன்.
○ நான் அவரை நேற்று பார்த்தேன்.
○ நான் அவரை நேற்று சந்தித்தேன்.
○ நான் பார்த்தேன் அவரை நேற்று.

Please come in.

○ தயவு செய்து உள்ளே வாருங்கள்.
○ உள்ளே வாங்க தயவு செய்து.
○ உள்ளே வந்து தயவு செய்யுங்கள்.
○ அனைத்தும் சரி.

# பருவத் தேர்வு வினாத்தாள் மாதிரி

பின்வரும் சொற்களைச் சரியாக அமைத்து வாக்கியமாக உருவாக்கி அது நேர்கூற்றா / நேரல்கூற்றா எனக் குறிப்பிடவும்.

(Quotations are not marked here) (5 x 1 = 5 marks)

அப்பாவிடம் (1) புத்தகம் (2) எனக்கொரு (3) வருமாறு (4) வாங்கி (5) சொன்னேன் (6)

------- ------- ------- ------- ------- ------- = நேர் / நேரல்

என்றேன் (1) அப்பாவிடம் (2) புத்தகம் (3) எனக்கொரு (4) வாருங்கள் (5) வாங்கி (6)

------- ------- ------- ------- ------- ------- = நேர் / நேரல்

எனக்கு (1) தெரியும் (2) எல்லாம் (3) கந்தன் (4) என்று (5) சொன்னான் (6)

------- ------- ------- ------- ------- ------- = நேர் / நேரல்

அவள் (1) அப்படியானால் (2) கந்தன் (3) இருக்க வேண்டாம் (4) அங்கே (5) எனக் கூறினாள் (6)

------- ------- ------- ------- ------- ------- = நேர் / நேரல்

தனக்கு (1) கூறினார் (2) அவர் (3) பசிப்பதாக (4) மிகவும் (5)

------- ------- ------- ------- ------- ------- = நேர் / நேரல்

SAMPLE

பின்வரும் வாக்கியங்கள் சரியா தவறா எனக் குறிப்பிடவும். (5 x 1 = 5 marks)

தொடர்பில்லாத இரு சொற்கள் உம்மைத் தொகையாகாது. சரி / தவறு

"தமிழ், ஆங்கிலம் அறிந்தவர் பலர்." இது உம்மைத்தொகை கொண்ட வாக்கியம். சரி / தவறு

மதியழகன் என்பது ஒரு உருவகச் சொல். சரி / தவறு

அழகுமதி என்பது ஒரு உருவகச் சொல். சரி / தவறு

இரவும் நிலவும் வளரட்டுமே! எனும் பாடலில் இரவு நிலவு என்பவை தொடர்புடைய சொற்கள். சரி / தவறு

பின்வரும் சொற்கள் எந்த வகையைச் சார்ந்தது எனப் பொருத்தவும் (5 x 1 = 5 marks)

வறுகடலை __________

பொரிகடலை __________

கருங்கடல் __________

பாற்கடல் __________

முகமலர் __________

(1) உருவகம் (2) வினைத்தொகை (3) பண்புத்தொகை (4) உவமைத்தொகை (5) உம்மைத்தொகை

# பருவத் தேர்வு வினாத்தாள் மாதிரி

கீழ்க்காணும் பெயர்ச்சொல்லுடன் 'அத்து' எனும் சாரியை (இடைச்சொல்) எப்படிச் சேரும்? (5 x 1 = 5 marks)

குளம் + நீர் ____________________

மரம் + இலை ____________________

கிணறு + தவளை ____________________

வானம் + நட்சத்திரம் ____________________

மனம் + உள் ____________________

பின்வரும் வாக்கியங்களைத் தமிழில் மாற்றி எழுதி இடைச்சொற்களைக் குறிப்பிடவும் (5 x 2 = 10 marks)

SAMPLE

She walked up the hill. ____________________

He talked about wild animals. ____________________

He came out of the jungle. ____________________

They walked around the park. ____________________

Lot of people worked under him. ____________________

பின்வரும் வாக்கியங்களின் ஆங்கில மொழியாக்கத்தை எழுதவும் (5 x 2 = 10 marks)

1, நான் மட்டுமில்லை அவனும் வந்திருந்தான்.

____________________

2. அவன் மட்டும் பேசாமல் இருந்தால் எனக்கு விடுதலை கிடைத்து விடும்.

____________________

3. தெருக்களில் குப்பையை அகற்ற மட்டுமே பல கோடிகள் செலவாகின்றது.

____________________

4. அந்த பெட்டியை மட்டும் எடுத்து வா.

____________________

5. என்னால் முடிந்த மட்டும் உதவி செய்கிறேன்.

# பருவத் தேர்வு வினாத்தாள் மாதிரி

**பின்வரும் வாக்கியங்கள் சரியா தவறா எனக் குறிப்பிடவும்** (5 x 1 = 5 marks)

| | |
|---|---|
| கிறு, கின்று ஆகியவை எதிர்கால இடைநிலைகள் | சரி தவறு |
| ஒரு பகுபதத்தின் பகுதி பெரும்பாலும் ஏவல் வினையாக வரும் | சரி தவறு |
| ஆன் எனும் விகுதி ஒருமை, பெண்பாலை குறிக்கும் | சரி தவறு |
| பன்மையை குறிக்க கட்டாயமாக விகுதி சேர்க்க வேண்டும் | சரி தவறு |
| பகுதி தனியே ஒரு பொருளை உணர்த்துவது போல் விகுதியும் தனியே பொருள் உணர்த்தும் | சரி தவறு |

**பின்வரும் வாக்கியங்களில் வரை எனும் இடைச்சொல் என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது?** (5x1 = 5 marks)

1. வரைமுறை இன்றி கடன் வாங்கியுள்ளார். ____________
2. இதுவரை நாற்பது பேர் படித்துள்ளனர். ____________
3. எனக்கு தெரிந்த வரை அவர் நல்லவர். ____________
4. வீடு வரை உறவு. ____________
5. சென்ற கூட்டத்தில் புதிய நமது அமைப்பின் விதிகள் வரையறுக்கப்பட்டன. ____________

(1) UNTIL (2) AS FAR AS (3) DEFINE (4) PLANNING (5) UPTO

SAMPLE

**கீழ்க்கண்ட பகுதியை முப்பது சொற்களில் சுருக்கி எழுதுக.** (Narrate the following in your own words not exceeding thirty words)

(15 marks)

ஒவ்வொருவரும் அவரவருக்குப் பிடித்த வேலையைத் தேர்ந்தெடுக்கின்றனர். அதில் அவர்கள் முழு மனத்துடன் ஈடுபட்டு வெற்றி காண்பதை நாம் காணலாம். ஒருசிலருக்குக் கலைத்துறை மிகவும் பிடிக்கும். பொம்மை செய்வதும் ஒரு வகையான கலைத்துறையே. ஒருசிலர் விலங்குகளையும் மனிதர்களையும் பொம்மைகளாகச் செய்து விற்கின்றனர். அவை அவர்களுக்கு வருமானத்தைத் தருகின்றன. அதைக்கொண்டு சிலர் குடும்பச்செலவை ஈடுகட்டுகின்றனர். அதனால், அவர்கள் அவற்றைத் தயாரிக்கும்போது மிகவும் கவனமாக இருக்கின்றனர். அவர்கள் தயாரிக்கும் பொம்மைகளில் ஓரிரு பொம்மைகள் மிகவும் அழகாகத் தோன்றும். மற்றும் சில பொம்மைகள் கற்பனை மிக்கவைகளாக இருக்கும். அவற்றைப் பார்த்து ரசிக்கும்போது மனத்தில் உள்ள கவலைகூடப் பறந்துபோகும். பொம்மைக் கலையை அடிப்படையாகக்கொண்டு இன்று இயந்திர மனிதர்களை உருவாக்கி வருகிறார்கள். இவை தொடர்பாகப் பல நிலைகளில் ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன

# பருவத் தேர்வு வினாத்தாள் மாதிரி

பின்வரும் பத்தியை ஆசிரியரிடம் படித்து அவர் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கவும். (15 marks)

'இன்னைக்கு நான் பாடம் எதுவும் நடத்தப் போவதில்லை. இன்று ஒரு சிறப்பான நாள். இன்று குழந்தைகள் தினம். உங்களுக்குப் பிடித்தமான கனவுகள், ஆசைகள், பொருட்கள் பத்தி நாமப் பேசலாம். உங்களுக்கு என்னென்ன பிடிக்கும் சொல்லுங்க. ப்ரீத்தி நீ முதல்ல சொல்லு'

'எனக்கு வெண்கரடியை நேரில் பார்க்க வேண்டும் என்று ஆசை'

'நல்ல ஆசை. முருகா நீ சொல்லு'

'எனக்குப் பசிபிக் பெருங்கடலில் நீந்த வேண்டும் என்று ஆசை'

'அடப்பாவி. இது அபாயகரமான ஆசை. அதற்கு நிறைய பயிற்சி தேவை. என்றாலும், உன் ஆசை நிறைவேற வாழ்த்துகள். மூர்த்தி நீ சொல்லு'

'எனக்குப் புளிச்சாதம் சாப்பிட ஆசை.'

'இது ரொம்ப எளிதான ஆசை. சுலபமா நிறைவேத்திடலாம். மகா நீ சொல்லு'

'எனக்குத் தமிழ் மூவேந்தர்கள் பற்றி ஒரு ஆய்வுக்கட்டுரை எழுத வேண்டுமென்ற ஆசை.'

'இது சிறப்பான ஆசை. வெண்ணிலா நீ சொல்லும்மா'

'எனக்கு வட்டநிலாவில கால் பதிக்க வேண்டும்'

SAMPLE